Registered as a Newspaper | பக்கங்கள் 04 | விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | மக்கள் தினசரி | Peoples Daily

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | மார்கழி 05 | (20-12-93) | திங்கட்கிழமை | ஓசை 305

## நோய் பரவும் அபாயத்தை தடுக்க ஒத்துழைக்குமாறு கோரிக்கை

தற்போது யாழ். குடாநாட்டில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமை காரணமாக நோய்கள் பரவும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்நிலைமையைத் தவிர்க்கும் முகமாக பொதுமக்களை ஒத்துழைக்குமாறு யாழ். சுகாதார வைத்திய அதிகாரி கோரியுள்ளார். இவ்வாறு நோய் பரவாது தடுப்பதற்காக குடிநீரை கொதிக்க வைத்து ஆறவைத்து குடிக்குமாறும் குடிநீர்க் கிணற்றுக்கு குளோரின் இடுமாறும் வெள்ள நீர் கலந்த குடிநீர்க் கிணற்றுநீரைப் பாவிக்க வேண்டாம் எனவும் மேலும் அவர் கோரியுள்ளார். குளோரின் இடுதல் போன்று உதவிகள் தேவைப் படுவோர் தமது பகுதி சுகாதார ஊழியருடனோ அல்லது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடனோ தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

# தேசத்துரோகக் குற்றம் புரிந்த 9 பேருக்கு மரண தண்டனை!

(யாழ்ப்பாணம்)

தேச விரோதச் செயல்கள் புரிந்த ஒன்பது பேருக்கு விடுதலைப் புலிகளால் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவர்களின் பெயர் விபரங்களும், இவர்கள் புரிந்த தேசவிரோத நடவடிக்கைகளும் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் விடுதலைப் புலிகளினால் அறிவிக்கப்பட்டது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட ஒன்பது பேரும், பொதுவாக இராணுவப் புலனாய்வுப் பிரிவிற்கு விடுதலைப் புலிகளின் முகாம்கள் பற்றியும், போராளிகள் பற்றியும் தகவல்களை வழங்குபவர்களாகவும், தேசத்துரோகக் கும்பலுடன் தொடர்பு பட்டவர்களாகவும் உள்ளனர்.

இதில் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் பாரிய குண்டு வெடிப்பொன்றை நடத்த திட்டமொன்றை தயார் செய்துமிருந்தார்.

இதேவேளை, இத்தேசதுரோகச் செயல்களுக்காக சிறிய சலுகைகளையும் இவர்கள் சிறிலங்கா இராணுவத்திடம் பெற்று வந்துள்ளனர்.

## சூறாவளி தாக்கும் சாத்தியம் இல்லை

(கொழும்பு)

வங்காளவிரிகுடாவில் உருவான தாழமுக்கம் நேற்று பிற்பகல் 4 மணியளவில் முல்லைத்தீவிலிருந்து 200 கிலோமீற்றர் தொலைவில் காணப்பட்டதாக கொழும்பு வானிலை அவதானநிலையம் அறிவித்தது. இத்தாழமுக்கமையம் வடமேற்கு திசையில் நகர்வதால் அது தமிழக கரைக்கு சென்றுவிடும் எனவும் இதனால் சூறாவளி இலங்கையை தாக்கும் சாத்தியமில்லை எனவும் அது மேலும் குறிப்பிட்டது.

வடக்கு, வடகிழக்கு, கிழக்கு கடற்பகுதியில் கடும் காற்றும் வடக்கு, வடமத்திய,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தேசத்துரோகம் புரிந்தோர் விபரமும், குற்றச்சாட்டும்

(யாழ்ப்பாணம்)

தேசவிரோதச் செயல்கள் புரிந்த ஒன்பது பேருக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் புரிந்த தேசவிரோதச் செயல்கள் குறித்த விபரமும் விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.

**விஜயரத்ன ஜெயரத்ன(சனா) (வயது23)**

மவுண்காமல் வீதி, யாழ்ப்பாணம்.

சிறிலங்கா இராணுவத்தின் மூன்றாவது கஜபாகு றெஜிமென்டில் செயற்பட்டவர். பின் அதிலிருந்து விலகி யாழ். வந்து யாழ்ப்பாணப் பெண் ஒருவரை திருமணம் செய்திருந்தார். அதன்பின் யாழ். போதனா வைத்தியசாலையில் பாதுகாப்பு ஊழியராக வேலையில் இணைந்து எமது இயக்க முகாம்கள் பற்றியும் இயக்கத் தளபதிகள் பற்றிய தகவல்களையும் சிறிலங்கா அரசிற்கு அனுப்பிக்கொண்டிருந்தார். யாழ். போதனா வைத்தியசாலையில் குண்டுத் தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதற்கு பெரும் எடுப்பிலான திட்டமொன்றை தயார் செய்த சமயமே இவர் எம்மால் கைதுசெய்யப்பட்டார். இவரது தகவலின் அடிப்படையில் அதியுயர் சக்திவாய்ந்த C4 ரக வெடிமருந்து கைப்பற்றப்பட்டது.

**பழனி தங்கவேல் (புலவர், கண்ணாடி) (வயது 36)**


விஷ்ணுகோவில் வீதி, கண்டி வீதி, மாங்குளம்.

இவரால் எம் முகாம்கள் காட்டிக்கொடுக்கப்பட்டு அவை விமானத்தாக்குதலிற்குள்ளாகியது.

வவுனியா சென்றுவரும் மேலும் சிலரை தான்

(4 ஆம் பக்கம் பார்க்க)







## மக்கள் விழிப்பாக இருந்து எதிரியின் நாசகார சதியை முறியடிக்க வேண்டும்

### பத்திரிகையாளர் சந்திப்பில் பொற்கோ

(நமது நிருபர்)

சிறிலங்கா அரசின் நாசகாரசெயல்களை, நாம் விழிப்பாக இருப்பதன் மூலம் முறியடிப்போம் என விடுதலைப் புலிகள் உறுப்பினர் திரு. பொற்கோ தெரிவித்தார்.

சிறிலங்கா இராணுவத்தினருக்கு நாசகார கைக்கூலிகளாக இருந்துவந்த ஒன்பது பேர் விடுதலைப்புலிகளால் தனது நாசகார கைக்கூலிகளின் செயற்பாடுகளையும் முடுக்கிவிட்டுள்ளது.

இவ்வேளையில் மக்கள் அனைவரும் மிக அவதானத்துடனும், விழிப்புணர்வுடனும் செயற்பட்டு எம் மக்களையும் தேசத்தையும் காப்பாற்றுவதற்கு எதிரியின் திட்டமிட்ட நடவடிக்கைகளை முறியடித்தல் வேண்டும்.

எமது மக்களின் தற்போதைய பொருளாதார நிலையை எதிரி தனக்குச் சாதகமாக்கி அற்ப ஆசைகளைக் காட்டி ஏமாற்ற முற்படுகிறான் இவ்வாறான எதிரியின் ஏமாற்று வலைக்குள் வீழ்ந்து எதிரிக்கு துணை போவதால் நாம் எம்மையே அழிப்பது மட்டுமல்லாமல் எமது வருங்கால சந்ததிகளையும் முற்றாக அழிக்க முற்படுகிறோம் என்பதை நினைவில் நிறுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். குடாநாடு

தேசவிரோதச் செயல்கள் புரிந்த ஒன்பது பேருக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் மரணதண்டனை விதிக்கப் பட்டுள்ளது. இவர்கள் புரிந்த தேசவிரோதச் செயல்கள் குறித்த விபரமும் விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.

**விஜயரத்ன ஜெயரத்ன(சனா) (வயது23)**
மவுண்காமல் வீதி, யாழ்ப்பாணம்.

சிறிலங்கா இராணுவத்தின் மூன்றாவது கஜபாகு றெஜிமென்டில் செயற்பட்டவர். வந்து யாழ்ப்பாணப் பெண் ஒருவரை திருமணம் செய்திருந்தார். அதன்பின் யாழ். போதனா வைத்தியசாலையில் பாதுகாப்பு ஊழியராக வேலையில் இணைந்து எமது இயக்க முகாம்கள் பற்றியும் இயக்கத் தளபதிகள் பற்றிய தகவல்களையும் சிறிலங்கா அரசிற்கு அனுப்பிக்கொண்டிருந்தார். யாழ். போதனா வைத்தியசாலையில் குண்டுத் தாக்குதல் ஒன்றை மேற்கொள்வதற்கு பெரும் எடுப்பிலான திட்டமொன்றை தயார் செய்த சமயமே இவர் எம்மால் கைதுசெய்யப்பட்டு அடிப்படையில் அதிரியா சக்திவாய்ந்த C4 ரக வெடிமருந்து கைப்பற்றப்பட்டது.

**பழனி தங்கவேல் (புலவர், கண்ணாடி) (வயது 36)**
விஷ்ணுகோவில் வீதி, கண்டி வீதி, மாங்குளம்.


இவரால் எம் முகாம்கள் காட்டிக்கொடுக்கப்பட்டு அவை விமானத்தாக்குதலிற்குள்ளாகியது.

வவுனியா சென்றுவரும் மேலும் சிலரை தான்

(4 ஆம் பக்கம் பார்க்க)


விஜயரத்ன ஜெயரத்ன


பழனி தங்கவேல்


கந்தசாமி கலைச்சந்திரன்


செல்லர் சௌந்திரராஜன்


முருகுப்பிள்ளை சத்தியராஜா


வல்லிபுரம் சந்திரசேகரம்


மரியதாஸ் தேவதாஸ்


தியாகராசா சண்முகநாதன்


சாமிவேல் ஆறுமுகம்

பற்றியும், போராளிகள் பற் ளனர்.

# மக்கள் விழிப்பாக இருந்து எதிரியின் நாசகார சதியை முறியடிக்க வேண்டும்

## பத்திரிகையாளர் சந்திப்பில் பொற்கோ

(நமது நிருபர்)

சிறிலங்கா அரசின் நாசகாரசெயல்களை, நாம் விழிப்பாக இருப்பதன் மூலம் முறியடிப்போம் என விடுதலைப் புலிகள் உறுப்பினர் திரு. பொற்கோ தெரிவித்தார்.

சிறிலங்கா இராணுவத்தினருக்கு நாசகார கைக்கூலிகளாக இருந்துவந்த ஒன்பது பேர் விடுதலைப்புலிகளால் கைதுசெய்யப்பட்டு விசாரணையின்பின் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது இது தொடர்பாக நேற்று யாழ்நகரில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே திரு. பொற்கோ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; சிறிலங்கா அரசானது தான் முன்னெடுக்கும் இராணுவ நடவடிக்கைகளில் அடுத்தடுத்து தோல்விகளைச் சந்திக்கும் அதேவேளையில் அரசியல் சூழ்நிலையிலும் பல நெருக்கடிகளை எதிர்நோக்குவதனால் தனது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக தனது நாசகார கைக்கூலிகளின் செயற்பாடுகளையும் முடுக்கிவிட்டுள்ளது.

இவ்வேளையில் மக்கள் அனைவரும் மிக அவதானத்துடனும், விழிப்புணர்வுடனும் செயற்பட்டு எம் மக்களையும் தேசத்தையும் காப்பாற்றுவதற்கு எதிரியின் திட்டமிட்ட நடவடிக்கைகளை முறியடித்தல் வேண்டும்.

எமது மக்களின் தற்போதைய பொருளாதார நிலையை எதிரி தனக்குச் சாதகமாக்கி அற்ப ஆசைகளைக் காட்டி ஏமாற்ற முற்படுகிறான் இவ்வாறான எதிரியின் ஏமாற்று வலைக்குள் வீழ்ந்து எதிரிக்கு துணைபோவதால் நாம் எம்மையே அழிப்பது மட்டுமல்லாமல் எமது வருங்கால சந்ததிகளையும் முற்றாக அழிக்க முற்படுகிறோம் என்பதை நினைவில் நிறுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். குடாநாடு முழுவதும் இரண்டாவது நாளாக மழை

## குடிசைகள் நீரில் மூழ்கின

(தென்மராட்சி)

யாழ். குடாநாடு முழுவதும் நேற்று இரண்டாவது நாளாக கடும் மழை பெய்த வண்ணம் இருந்தது. இக் கடும் மழையினால் குளங்கள் உடைப்பெடுத்துள்ளதுடன் பல குடிசைகள் நீரில் மூழ்கியுள்ளன.

தென்மராட்சிப் பகுதியின் பல பகுதிகளும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. பண்டிதர் குடியிருப்பில் இருந்த சில நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். இங்கிருந்த அனைத்து குடிசைகளுக்குள்ளும் வெள்ளம் புகுந்துள்ளன.

கிளாலி, அல்லிப்பளை, எழுதுமட்டுவாள், கச்சாய்ப் பகுதி வீதிகளை மூடி வெள்ளம் பாய்ந்தவண்ணமுள்ளதால் அனைத்து போக்குவரத்துகளும் தடைப்பட்டுள்ளன. கடல் கொந்தளிப்பால் கச்சாய் கடற்பகுதியில் பல கட்டுமரங்கள் அடித்துச் செல்லப்பட்டன. கொடிகாமம் பகுதியில் பயன்தரு மரங்கள் வீதிகளின் குறுக்கே வீழ்ந்துள்ளதுடன் பல மரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. இங்குள்ள காக்கியன்குளம் உடைப்பெடுத்து மக்கள் குடியிருப்புகளுக்குள் புகுந்துள்ளதால் மக்கள் இடம்பெயர்ந்தவண்ணமுள்ளனர்.

வரணிப்பகுதி வயல்கள் அனைத்தும் நிரம்பிக் காணப்படுகின்றன, சாவகச்சேரி சந்தைப் பகுதி மற்றும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைப் பகுதி முன்பாக இருந்த வீதிகள் அனைத்தும் மூடி வெள்ளம் பாய்ந்த வண்ணம் உள்ளது இதனால் இப் பகுதிகளூடான போக்குவரத்துக்களும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. இப்பகுதிகளில் இருந்த மண் குடிசைகள் பல இடிந்து வீழ்ந்துள்ளதை காணக் கூடியதாக இருப்பதாக நமது செய்தியாளர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பு மாவட்டத்தில்

# 30,000 குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிப்பு

மட்டக்களப்பில் வெள்ளத்தினால் 30ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த 1,25,000பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் சகல பிரதேச செயலர் பிரிவுகளிலும் வெள்ள அநர்த்தம் ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. இவற்றில் நான்கு பிரதேச செயலர் பிரிவுகள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.

அநுராதபுரத்தில் ராஜாங்கன வாவி உடைப்பெடுத்ததால் 300க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பதவியா பகுதியில் நிவாரணப்பணிகளில் விமானப்படை ஹெலிகப்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன. வவுனியா, திருக்கோணமலை, பொலநறுவை, மாத்தளை மாவட்டங்களில் வெள்ளத்தினால் ஆயிரக் கணக்கில் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# வெள்ள நிவாரணம் வழங்க அரச அதிபர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் கடும் மழையினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு உடனடியாக நிவாரணப் பொருள்களை வழங்குமாறு யாழ். அரசாங்க அதிபர் சகல உதவி அரசாங்க அதிபர்களுக்கும் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் தொடர்ந்து பெய்யும் மழையினால் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறிய மக்களுக்கு மட்டுமே இவ் ஒரு வார நிவாரணங்களை உடனடியாக வழங்குமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

# வன்னிப்பகுதி குளங்கள் உடைப்பெடுக்கும் நிலை

(கிளிநொச்சி)

தொடர்ந்து பெய்து வரும் மழையினால் கிளிநொச்சிப் பகுதியில் பத்தாயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன பல வீடுகள் இடிந்து போயுள்ளதுடன் கால்நடைகள் பலவும் இறந்துள்ளன

கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் பகுதிகளில் உள்ள சகல குளங்களும் உடைப்பெடுக்கும்அபாயம் உள்ளது அக்கராயன் குளம், பாண்டியன் குளம், மல்லாவி, துணுக்காய், விநாயகர்புரம் குளங்கள், சின்ன விளாங்குளம் ஆகியன உடைப்பெடுக்கும் நிலையில் உள்ளன வவுனிக்குளம் அணைக் கட்டுகள் சேதமடைந்துள்ளதுடன் கலிங்கிலிருந்து 3அடி உயரத்திற்கு நீர் வான்பாய்கிறது இதனை அடுத்து மக்கள் பாதுகாப்பான இடத்திற்கு இடம்பெயர்ந்துள்ளனர் இரணைமடுக்குள நீர் மட்டம் 35 அடிக்கு உயர்ந்துள்ளது இக்குளத்தின் கட்டுகள் உடைப்பெடுக்கும் நிலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## படகுச்சேவை இல்லை

கிளாலி - பூநகரி படகுச் சேவை மறு அறிவித்தல்வரை நடைபெறமாட்டாது என அரசியல்துறையினர் அறிவித்துள்ளனர்.

## வரி விளம்பரம்

### காணவில்லை

தங்கராஜா சிவலக்சுமி NO 7 நாயன்மார்கட்டு நல்லூர் என்ற முகவரியுடையதும் ஒரு கிராம சேவகரால் வழங்கப்பட்ட அடையாள அட்டையும், பணமும் 6-12-93இல் தொலைந்துவிட்டது தயவு செய்து கண்டெடுத்தவர்கள் இந்த முகவரிக்கு கொண்டுவரவும் சை தங்கராசா பதிவாளர் வீதி, கதுமலை தெற்கு. (6928)

### கடிகாரங்களா? றேடியோவா?

நல்ல நிலையிலுள்ள கடிகாரங்கள், றேடியோக்கள் உதிரிப் பாகங்களுக்காக வாங்கப்படும் விற்கப்படும் சகல கடிகாரங்கள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் (Dilka Watch & Radio Works) ஸ்ரான்லி வீதி, (வ னவில் அருகில்) கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. (சி-8129)

### போர் முரசம் கேட்கிறது

'போர் முரசம் கேட்கிறது' 'கொழும்பில் கல்யாணம்' நாடகங்களை எழுதித் தயாரித்த அரலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் வானொலி நாடக நூல், முதலாம் பிள்ளை 30/- சில பிரதிகளே உள்ளன. பூபாலசிங்கம் புத்தகசாலை (6791)

### துளிர்

தமிழ்நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர் அறிவியல் இதழ். கிடைக்கும் இடம் வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (6861)

### இந்தியா டுடே

இலங்கை ஏஜண்டான P S சுந்தரம் அன சன்ஸ் அவர்களால் தமிழீழத்தில் ஏஜண்டாக எம்மை நியமித்துள்ளார்கள். வாடிக்கையாளரின் நன்மை கருதி விலை குறைத்துள்ளோம். மக்மிலன் ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (சி-8111)

### கலண்டர், டயறி வகைகள்

லீலா கலண்டர், சகலவித மான டயறி வகைகள், கிறிஸ்மஸ் காட், அன்பளிப்பு அட்...

---

பருத்தித்துறை, நகராட்சி மன்றம்

## மாட்டிறைச்சிக்கடைக் குத்தகைக்கான கேள்வி அறிவித்தல் 1994

மேற்காட்டிய குத்தகை சார்பில் 01-01-1994-ந் திகதி தொடக்கம் 31-12-1994-ந் திகதி வரைக்கான காலப்பகுதிக்குரிய கேள்விகள் 30-12-1993-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விப்பத்திரங்கள் இந்நகராட்சிமன்ற அலுவலகத்தில் 29-12-1993-ந் திகதி பிற்பகல் 3-00 மணிவரை மீளளிக்க முடியாத படிவக் கட்டணம் ரூபா 150/-ம், மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப் பணம் ரூபா 1500/-ம் பணமாகச் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளில் "செயலாளர், நகராட்சிமன்றம், பருத்தித்துறை" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டுத் தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் "மாட்டிறைச்சிக் கடைக்கான கேள்வி - 1994" எனத்தெளிவாக எழுதப்பட்டுப் பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது இதற்கென இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும்.

இக்குத்தகைக்கான ஏற்றுக் கொள்ளப்படக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா 104,000/- ஆகும்.

இது சம்பந்தமான நிபந்தனைகளையும், மேலதிக விபரங்களையும் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

க. சண்முகநாதன்
செயலாளர்,
நகராட்சிமன்றம், பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை, 16-12-1993 (சி-8169)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு
21.03.1984

உதிர்வு
31.12.1992

திதி
20.12.1993
ஸப்தமி

---

## 1-ம் ஆண்டு நினைவு நாள்



கடற்புலி மேஜர் சாம்பசிவம்
(மு. மகாலிங்கம் ரவிச்சந்திரன்)
(உடுத்துறை வடக்கு)

| தாயின் மடியில் | வீரச்சாவு |
|---|---|
| 20.03.1969 | 19.11.1992 |


ஓ.. ரவி உன் நினைவலைகள்
எம் இதயத்தில் என்றும் ஒலிக்கிறது
எம் இளைய சோதரனாய்
நீ வாழ்ந்த காலத்தை கழித்து விட்டு
மண் மீட்கும் பணிதனை தொடர்ந்திட
கடல் அன்னையின் மடிதனில்
துயின்றாயோ - உன் அன்னை
இங்கு தவியாய் தவிக்கிறாளடா
ஓராண்டு நினைவுகள் அல்ல
ஓராயிரம் ஆண்டுகள் தான் ஓடி மறைந்தாலும்
உம் நினைவுகள் எம்மை விட்டு அகலாது.

உம் பிரிவால் துயருறும்.
அப்பா, அம்மா, சகோதரி, சகோதரர்கள்.

20.12.93 இன்று எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் மதியபோசன நிகழ்வில் உற்றார், உறவினர், சகபோராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (6912)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்



---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயத்தில் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரீட்சையில் (1993) சித்தி அடைந்த மாணவச் செல்வங்களையும் அதிபரையும், ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | மாணவர்கள் பெயர் | பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 1. | செல்வி ம. தக்ஷாயினி | 175 |
| 2. | செல்வன் ச. வினோதன் | 163 |
| 3. | சென்வன் ச. பாரதி | 150 |
| 4. | செல்வன் ம. பிரபாகரன் | 144 |
| 5. | செல்வன் கு. பிரதீப் | 142 |
| 6 | செல்வன் ஜெ. வினேஸ் | 140 |

கல்வியங்காடு, நல்லூர். அன்புள்ள பெற்றோர்கள்
(6929)

---

## நினைவு கூருகின்றோம்...
1993-12-20

1985ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ் - அரியாலைப் பகுதியில் எமது முகாம் ஒன்றினை சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றிவளைத்தபோது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

**கார்த்திக்** (தம்பு இராசப்பு - உகயகுமார் கோண்டாவில் மேற்கு - யாழ்)

1986ஆம் ஆண்டு ஊர்காவற்றுறை, வேலணைப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**வல்லி** (பொன்னுத்துரை சாந்தகுமார் - குமரக்கோட்டம் கோண்டாவில் - யாழ்)

1987ஆம் ஆண்டு அச்செழுப்பகுதியில் இந்தியப் படையினருடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**சகிலா** (றஜனி நவரட்ணம் - பெற்றாவீதி-மன்னார்

ஊரெழுப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய-

**பவான்** (கறுப்பையா தயாபரன் - பெரியமடு-மன்னார்)

**கப்டன் பாரதிமாஸ்ரர்** (கனகலிங்கம் ரவீந்திரன் 170, கஸ்தூரியார் வீதி. யாழ்)

**தாஸ்** (சின்னராசா சதீஸ்வரன் - அளவாவோடை, ஏழாலைமேற்கு - யாழ்)

**லோகேந்திரன்** (ஐயாத்துரை லோகேந்திரன் அச்செழு - யாழ்)

**ரவி** (சுப்பிரமணியம் தவேந்திரன் - ஏழாலைமேற்கு -யாழ்)

**சந்திரன்** (துரைராஜா சண்முகரத்தினம் - அம்மன் வீதி, பண்டத்தரிப்பு யாழ்)

**குண்டுத்தம்பி** (மகாலிங்கம் நாகேஸ்வரன் -7ஆம் கட்டை, மல்லாகம்தெற்கு யாழ்)

**ஆனந்தன்** உலகநாதன் முரளி -639, கடற்கரைவீதி யாழ்)

**சந்திரன்** (செவஸ்ரின் தேவகுரு - நெடுந்தீவு)

**ஜோன்சன்**(— — —)

**மாவி** (கந்தசாமி யோகேஸ்வரன் - இன்பம் வீதி, வண்ணார்பண்ணை-யாழ்)

யன் இரக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர் அறிவியல் இதழ். கிடைக்கும் இடம் வசந்தம் புத்தக நிலையம் 405, அருச்சுனா வீதி, யாழ்ப்பாணம். (6861)

---

### இந்தியா டுடே

இலங்கை ஏஜண்டான P S சுந்தரம் அன சன்ஸ் அவ களால் தமிழீழத்தில் ஏஜண்டாக எம்மை நியமித்துள்ளார்கள். வாடிக்கையாளரின் நன்மை கருதி விலை குறைத்துள்ளோம். மக்மிலன் ஸ்ரீகாந் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (சி-8111)

---

### கலண்டர், டயறி வகைகள்

லீலா கலண்டர், சகலவித மான டயறி வகைகள், கிறிஸ்மஸ் காட். அன்பளிப்பு அடிப்பதற்குரிய கலண்டர் மொத்தமாகவும், சில்லறையாகவும் மக்மிலன், ஸ்ரீகாந் புத்தகசாலைகள் யாழ்ப்பாணம். (சி-8112)

---

## ஆண்டு நிறைவு விழா

சிந்தன்கேணி கலை நகர் மதர் கிராம முன்னேற்றச் சங்கத்தால் நடாத்தப்படும் அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் ஒன்பதாவது ஆண்டு நிறைவு விழாவும் மாணவர் கௌரவிப்பு விழாவும் இன்று திங்கட்கிழமை நண்பகல் 1 மணியளவில் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவி திருமதி புஷ்பராணி சிதம்பரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

## தொலைக்கல்வி ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

நாளை செவ்வாய்க்கிழமை காலை பத்து மணிக்கு சகல சிரேஷ்ட போதனாசிரியர் களையும் யாழ் கல்வித்திணைக்களத்தில் சந்திக்குமாறு தொலைக்கல்வி இணைப்பாளர் துரை தியாகராஜா கேட்டுக் கொண்டுள்ளார்.

## மண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு நயினாதீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்கு தற்போது மண்ணெய் விநியோகிக்கப்படுகின்றது குடும்ப அட்டை ஒன்றிற்கு இரண்டு லீற்றர் மண்ணெய் லீற்றர் இருபத்தைந்து ரூபா விலையில் சங்கத்தின் ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் உள்ள கிளையொன்றில் இவ் விநியோகம் நடைபெறுகின்றது. (22)

---



மலர்வு
21.03.1984

உதிர்வு
31.12.1992

திதி
20.12.1993
ஸப்தமி

### நாராயணன் திவ்வியாழினி

ஆண்டு 3 1992
(புனித யோண்பொஸ்கோ மாணவி)

அன்புடனே வாழ்ந்தவளே எங்கள் திவ்யா
ஆண்டு நூறு வாழ்வாய் என்று எண்ணி
இன்பமுடன் வாழ்ந்தவேளை பாதியிலே நீ
ஈன்றவரை பிரிந்து ஓர் ஆண்டு மறைந்ததம்மா.

பிரிவுத்துயரில் துடிக்கும்
பப்பா, மம்மி, அனுஷா,
நீரஜா, பூவேந்தன்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள். (6924)

167/11, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

---

## 8-வது ஆண்டு வீர அஞ்சலி



தாயின் மடியில்
05-07-1964

தாயக
மண்ணின் மடியில்
20-12-1985

### வீ. வேங்கை கார்த்திக்

(இ. உதயகுமார்) கோண்டாவில்

மறத் தமிழன் வாழுகின்ற ஈழமண்ணில்
மாற்றான் படை வந்திறங்கி முயன்ற வேளை
மானத்தோடு மாவீரர் நீ எழுந்து
ஈனர்படை எதிர்த்து மோதி விரட்டி அடித்தாய்
தானெனவே போற்றும் தமிழ் மண்ணுக்காக
தந்தாய் உந்தன் ஆவிதனை தற்கொடையாய்
அன்னியனின் படைவிரட்ட நீ நடந்த
அடிதொட்டு நாங்கள் நடைபோடுகிறோம்
வாழ்க உன் புகழ் மலர்க சுதந்திர தமிழீழம்

பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர்கள், நண்பர்கள்.
உற்றார் உறவினர்கள்.

உதயகுமார் வீதி
கோண்டாவில்
(6933)

---


இங்கு தவியாய் தவிக்கிறாளடா
ஓராண்டு நினைவுகள் அல்ல
ஓராயிரம் ஆண்டுகள் தான் ஓடி மறைந்தாலும்
உம் நினைவுகள் எம்மை விட்டு அகலாது.

உம் பிரிவால் துயருறும்.
அப்பா, அம்மா, சகோதரி, சகோதரர்கள்.

20.12.93 இன்று எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் மதியபோசன நிகழ்வில் உற்றார், உறவினர், சகபோராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். (6912)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பிதழும்



### திரு. செல்லையா சேனாதிராஜா

மலர்வு
02-04-1924

உதிர்வு
20-11-1993

தன்னையேதானொறுத்துத்தனையருக்காயிவ்வுலகில்
உன்னையே ஈந்தாய் உவப்புடனே -- இன்னும்
குடும்பத்தி லேறபட்ட குந்தகத்தை நீயேறறெம்
இடும்பை தீர்த்த மகன்

பேரர்பேர்த்தியுடன் பிரியமாய் நீயிருந்து
ஆரத் தழுவி அன்புசெய்தாய் --- நேரம்
அறைந்தறைந்து வாழ்வில் அன்றாடம் பணிபுரிந்த
நிறைந்த வாழ்வுற்ற வன்

எமது குடும்பத்தலைவரின் வீட்டுக்கிருத்தியம் 20-12-93 திங்கட்கிழமையாகிய இன்று எமதில்லத்தில் நடைபெறும் அவ்வமயம் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து எமது குடும்பத்தலைவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

அம்மன்கோவிலடி,
கோண்டாவில். (6925)

---

கொண்டு வீரச்சாவெய்திய-

**சகிலா** (றஜனி நவரட்ணம் - பெற்றாவீதி-மன்னார்

ஊரெழுப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய-

**பவான்** (கறுப்பையா தயாபரன் - பெரியமடு-மன்னார்)

**கப்டன் பாரதிமாஸ்ரர்** (கனகலிங்கம் ரவீந்திரன் 170, கஸ்தூரியார் வீதி. யாழ்)

**தாஸ்** (சின்னராசா சதீஸ்வரன் - அளவாவேரடை, ஏழாலைமேற்கு - யாழ்)

**லோகேந்திரன்** (ஐயாத்துரை லோகேந்திரன் அச்செழு - யாழ்)

**ரவி** (சுப்பிரமணியம் தவேந்திரன் - ஏழாலைமேற்கு -யாழ்)

**சந்திரன்** (துரைராஜா சண்முகரத்தினம் - அம்மன் வீதி, பண்டத்தரிப்பு யாழ்)

**குண்டுத்தம்பி** (மகாலிங்கம் நாகேஸ்வரன் -7ஆம் கட்டை, மல்லாகம்தெற்கு யாழ்)

**ஆனந்தன்** உலகநாதன் முரளி -639, கடற்கரைவீதி யாழ்)

**சந்திரன்** (செவஸ்ரின் தேவகுரு - நெடுந்தீவு)

**ஜோன்சன்**( — — — )

**மாவி** (கந்தசாமி யோகேஸ்வரன் - இன்பம் வீதி, வண்ணார்பண்ணை-யாழ்)

இதே சம்பவத்தின்போது இந்தியப்படையினரால் கொலை செய்யப்பட்ட 3 தமிழர்கள்.

1988ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகளால் கைது செய்யப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்ட

**கேசியன்– குமார்** (குணரட்ணம் ஜெயக்குமார் 6/1, மீனாட்சியம்மன் வீதி கொட்டடி -யாழ்)

மாங்குளத்தில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட துணுக்காய்வீதியைச் சேர்ந்த இளம் பெண்

யாழ்-பொலிகண்டிப் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளைஞன்

1991ஆம் ஆண்டு திருமலை மூதூரில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட எறிகணை வெடிவிபத்தில் எமைப் பிரிந்த-

**கப்டன் கிர்மானி-கதிர்வேலன்** (ந. துரைராசா சிவராஜ்குமார் - லிங்கநகர் - திருமலை)

**லெப். கைலன்-கனியன்** (சண்முகம் சித்திவிநாயகம் மூதூர் - திருமலை)

**ரகு** (குமரன் சுரேஷ் - முகத்துவாரம் -கொழும்பு-15)

1992 ஆம் ஆண்டுமன்னார்நானாட்டான்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் தொடர் காவலரண்கள்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப். தங்கன்** (அழகையா ஐயாத்துரை- மகிளூர்முனை, ஒந்தாச்சிமடம் - மட்டு)

**மேஜர் ஆசிர்** (கணேசபிள்ளை ராஜகுலசிங்கம்-கல்லூரிவீதி, - திருமலை)

**2-ம் லெப். சிறிகாந்தன்** (அந்தோனிமுத்து வரதராசன் - பெரியகுஞ்சுக்குளம் - வவுனியா)

**கப்டன் வாசுதேவன்-ஜோய்** ( ஐயம்பெருமாள் செல்வகுமார் -ஸ்ரேசன்வீதி - மன்னார்)

**லெப். சச்சு** (அன்ரனி சிறிகாந் - தலைமன்னார், பியர்-மன்னார்)

**லெப். தமிழவன்** (ஈசாந் சுதா - நறுவிலிக்குளம் வங்காலை- மன்னார்)

**இசையமுதன்** (இராசையா மோகனகுமார் - சிவபுரம்கிரான்சி- மன்னார்)

மட்டு - தம்பன்சேணிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**செந்தூரராஜ்-ரகீம்** (மயில்வாகனம் கோணேசமூர்த்தி - பெரியகல்லாறு - மட்டு)

**அம்சன்** (சண்முகம் நடேஸ்வரன் கோயில்போரதீவு மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி/8164)

### சிந்தனைக்கு

ஊசிமுனைக் காதுக்கு ஊடாக ஒட்டகம் புகுந்தாலும் பணக்காரன் மோட்ச ராட்சியத்தினுள் பிரவேசித்தல் இயலாது.

- விவிலியம்.


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 20-12-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023

த. பெ. எண் - 05


## விசுவாசம் ஏற்கப்படுமா?

ஜெரிசில்வா இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்க இருப்பதை அடுத்து சிறிலங்காவின் முப்படைத் தளபதிகளும், பொலிஸ்மா அதிபரும் கிறிஸ்தவர்கள் என்ற நிலை உருவாகியுள்ளது. பௌத்த அடிப்படைவாதத்தை தீவிரமாகக் கைக்கொள்ளும் சிறிலங்கா அரசில், இது ஒரு முரண்பாடான அம்சமே ஆகும்.

இந் நிலையில் இம் மூன்று தளபதிகளுக்கும், பொலிஸ்மா அதிபருக்கும் தமது பதவிக்காலத்தில் பல அக்கினிப் பரீட்சைகளைச் சந்திக்க வேண்டி வரலாம். பௌத்த அரசிற்கும், பௌத்த அடிப்படைவாத கடும்போக்காளருக்கும் தமது விசுவாசத்தை வெளிக்காட்ட தமது சக்திக்கும், வரையறைக்கும் அப்பாற்பட்டும் செயற்பட வேண்டிய நிலை தவிர்க்க முடியாதது. ஆனால், அது எந்தளவிற்குச் சாத்தியமாகும், அவ்வாறு சாத்தியமானாலும் பௌத்த பேரினவாதிகளால் அது ஏற்றுக் கொள்ளப்படுமா? என்பதும் கேள்விக்குரியதே

ஏனெனில், ஆயுதப்படைத் தளபதிகள் முன்னுள்ள பொறுப்புக்கள் இன்று சிறியதல்ல. சிறிலங்கா அரசும், பௌத்த அடிப்படைவாதிகளும் எதிர்பார்ப்பது போன்று போரில் வெற்றி பெற வேண்டும், அதிலும் குறைந்த இழப்புக்களுடன் வெற்றியீட்ட வேண்டும்.

ஆனால், சிறிலங்கா ஆயுதப் படையோ தொடர்ச்சியான பல தோல்விகளால் பெரிதும் நொந்து போயுள்ளது. குறிப்பாக, இராணுவத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பு அதன் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் சிதைத்துள்ளதோடு, அதன் யுத்த தந்திரோபாயமும் தோல்வி கண்டுள்ளது. மேலும் முரண்பாடுகளால் இராணுவம் பிளவுண்டு போயுள்ளது.

# தோற்றுப்போன தந்திரோபாயத்தின் பின்பும் பூநகரியில் ராணுவம் தரித்திருப்பது ஏன்?

'பூநகரி கற்பித்த பாடங்கள்' என்னும் தலைப்பில் 'கவுண்ட பொயின்ற்' சஞ்சிகையில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம்.

காத்திருந்ததுபோல பூநகரியில் பெரும் அழிவு ஏற்பட்டு விட்டது தோல்விகளையே வெற்றிகளாகச் சித்திரித்துக் காட்டும் ஓர் இராணுவம், தனது தோல்விகளிலிருந்து படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ளத்தவறுமேயானால், திரும்பத்திரும்ப ஒரே மாதிரியான தவறுகளை இழைக்காத எதிரிகளிடமிருந்து இன்னும் பல பாடங்களைக் கற்கவே நேரிடும்

பத்து ஆண்டு காலமாக நீடித்துவரும் இப்போரில் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக முன் எச்சரிக்கைகள் பல உளவுத் துறையினரால் விடுக்கப்பட்டிருந்த போதும், பூநகரிமுகாம்மீது விடுதலைப் புலிகள் தாக்கத் தொடங்கிய வேளையில் அங்கிருந்த படையினருக்கு அது ஆச்சரியமானதாகவே இருந்துள்ளது.

கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாகவே விடுதலைப் புலிகள் பூநகரி ஊடாக மக்கள் போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படுகின்ற சூழ்நிலை அல்லது குடாக் கடலைக் கடப்பதற்கு பாதுகாப்பான பாதை ஏற்படுகின்ற சூழ்நிலை உருவாக்கப்படும் என்று குடா நாட்டுமக்களுக்கு வாக்குறுதி அளித்துவந்துள்ளனர். புலிகளின் நடவடிக்கைகளை நெருக்கமாக அவதானித்தோரும், அவர்களது வானொலித் தகவல்களை உற்றுக் கேட்டோரும் சில தினங்களுக்கு முன்பாகவே தாக்குதல் திட்டம்பற்றி உறுதிப்படுத்தினர்.

பூநகரி முகாமிலுள்ள உயர் அதிகாரிகள் தகவல்கள் சேகரிப்பதற்காக விடுதலைப்புலிகளின் ஊடுருவல்கள் பல தடவை இருந்ததாகக் கூறியுள்ளனர் முன்னணிக்காவலரண்களைக் கடந்து தகவல் சேகரிப்பதற்காக ஊடுருவிய விடுதலைப் புலிகளில் பதினைந்துபேர் படையினரால் கொல்லப்பட்டதும் உண்மையே. 1991-ல் ஆனையிறவு முகாமின் மீதான தாக்குதலின் படிப்பினைகளைத் தொடர்ந்து, பூநகரி முகாம் மீதான தாக்குதலுக்கு இரு வாரத்திற்கு முனபே அம் முகாமின் வரைபடங்கள் முழு

அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து பூநகரிக்கும் தகவல் கிடைத்துள்ளது. பூநகரியில் கடமையில் இருந்த கப்டன் இத் தகவலைப் பெற்றுக் கொண்டுள்ளார். எனினும் முகாமில் இருந்த மூத்த அதிகாரிகள் இத்தகைய எச்சரிக்கை எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என்றே பின்னர் தெரிவித்தனர் இரவு நேரத்தில் மூத்த அதிகாரிகளைத் தொந்தரவு செய்ய கப்டன் சில சமயம் விரும்பாமல் இருந்திருக்கலாம். கஜபாகு படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரி லீவில் சென்றிருந்ததைத் தொடர்ந்து இலகு காலாட் படையின் கட்டளையிடும் அதிகாரியான லெப் கேணல் ரஞ்சித் சில்வாதான் அங்கிருந்த அனைத்து படையினருக்கும் சிரேஷ்ட அதிகாரியாக தாக்குதல் நடந்த சமயம் இருந்திருக்கிறார்- தாக்குதல் நடந்த சமயம் படையினர் ''ஸ்ரான்ட் 2'' நிலையில்இருந்ததாகவும், அதனால்தான் அதிலிருந்த அனைவரும் கொல்லப்படவில்லை எனவும் அவர் பின்னர் தெரிவித்தார்- ''ஸ்ரான்ட் 2'' என்பது இராணுவ பரிபாஷையில் படையினர் தமது நாளாந்த நடவடிக்கையில் ஈடுபடுவதையும், தமது ஆயுதங்களையும் பாதுகாப்பு நிலைகளையும் பரிசீலனைசெய்வதையும் குறிப்பது என்பதுடன், ஒவ்வொருபடையினரும்தினசரிஒருதடவையாவது இவ்வாறுசெய்தல் வேண்டும் என்பதும் கட்டாயமானதாகும்- எப்படியாயினும், காயம்பட்டிருக்கும் டசின் கணக்கான படையினரில் எவரும் தாம் ''ஸ்ரான்ட் 2'' நடவடிக்கையிலிருந்தது பற்றி குறிப்பிடவில்லை என்பதுடன் தாக்குதல்தொடங்கியபோது தாம் ஆச்சரியத்திற்குள்ளானதாகவும் கூறியுள்ளனர்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை தமது தயாரிப்பு வேலைகளை மிகவும் திறம்பட செய்திருந்தனர் என்பதும், அது அவர்களுக்கு பிரமாதமான பலனைக் கொடுத்ததுஎன்பதும் கவனிக்கத்தக்கது- கனரக மோட்டார்கள் இருந்த நிலைகள் காலாட்படைத் தலைமையகம், ரி-55 தாங்கியின் நிலை

அதிகாரிக்கு இராணுவத் தளபதி சிசில் வைத்தியரட்ணா பதவி உயர்வு அளித்தமையானது ஏனைய இராணுவ அதிகாரிகள் மத்தியிலே விசனத்தை ஏற்படுத்தியது. ஏனெனில், ஆனையிறவு தளத்தை தாக்கி அழிக்க விடுதலைப்புலிகள் முற்பட்டபோது ஒரு மாதத்திற்கு மேலாக மேலதிக உதவிகள் கிடைக்கும்வரையில் தாக்குப்பிடித்த லெப். கேணல் சரத் கருணாரத்னா இவ்வாறு கௌரவிக்கப்படவில்லை என்பது ஆச்சரியமளிக்கக் கூடியதாகும். இன்றைய இராணுவம் சில பைத்தியக்காரத்தனமான விவாதங்களையே முன்வைக்கிறது- தோல்விகளை வெற்றிகளாகவும், வெற்றிகளைத் தோல்விகளாகவும் அவற்றிற்குப் பொறுப்பானவர்கள் யார் என்பதைப் பொறுத்துக் காட்ட முற்படுகின்றது- தோல்வியை வெற்றியாக்குவதற்கு ஒருவரைக் கதாநாயகனாக்க தேடுகின்றது. முதல் சில மணித்தியாலங்களில் புலிகள் பெற்ற பெரும் வெற்றியைப் பயன்படுத்தி அப்போது பெரும் விரக்திக்குள்ளாகியிருந்த படையினரைத் துரத்திச் சென்று தாக்காதது ஏன் என்பது இன்னமும் தெளிவு படுத்தப்படவில்லை. அந்த இரவில் அவர்கள் தாக்குதலைத் தொடராதது இராணுவத்தினருக்கு பெருமளவு நேரத்தைப் பெற்றுக் கொடுத்துவிட்டது- புலிகள் அடுத்த தாக்குதலை நடத்த 24 மணி நேரத்திற்குமேல் எடுத்தபோது இராணுவத்தினர் திருப்பித்தாக்கக் கூடியளவுக்கு தமது நிலையைப் பலப்படுத்திக் கொண்டுவிட்டனர். வான் தாக்குதல் பாதுகாப்புத்தான் ஒரேயொரு வித்தியாசமாக இருந்தது.

காலநிலை சீரற்று இருந்த

டார். 2000க்கு மேற்பட்ட இராணுவத்தினர் இருந்த மேற்படி முகாம் நிர்மூலமாக்கப்பட்டால் அல்லது படையினர் அனைவரும் கொல்லப்பட்டால் அதன் விளைவுகளை உணர்ந்த அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு கண்டிப்பான உத்தரவுகளைப் பிறப்பித்ததோடு முப்படைத் தளபதிகளும் மீட்பு நடவடிக்கையில் உடனடியாக ஈடுபடுவதற்கும் உத்தரவிட்டார். பொதுவாக இதமாகக் காணப்படும்ஜெனரல் வணசிங்க மீட்பு நடவடிக்கைக்கான திட்டம் எதுவும் இல்லாமை கண்டு மிகுந்த சினம் அடைந்தார். உடனடியாக மீட்பு நடவடிக்கை எடுக்கவும் இல்லையேல் இடத்தைவிட்டால் மற்றவர்கள் அதனைச் செய்யக்கூடும் என்பதுவே அவரது செய்தியாக இருந்தது. மண்கிண்டி மலையிலும், யாழ்தேவி நடவடிக்கையிலும், இராணுவத்தினர் பாடங்களைப் பெற்றுக் கொண்டார்களோ, இல்லையோ பூநகரியிலிருந்து கட்டாயம் படித்துக் கொள்ளத்தான் வேண்டும், இரண்டாவது ஈழப்போர் தொடங்கிய பின்னர் வட பகுதியிலிருந்த நான்கு படை முகாம்கள் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டுள்ளன. முன்னணிப் பாதுகாப்பு அரண்களை நிறுவி முகாம்களைப் பாதுகாக்கும் தந்திரோபாயத்தில் அதிக நம்பிக்கை கொள்ள முடியாது என்று இராணுவ அதிகாரிகள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். ஏனெனில் விடுதலைப்புலிகள் இதனை முறியடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர், முகாம்களிலிருந்து முன்னேறி தனித்தனியாக அமைக்கப்படும் இக் காவல் நிலைகள் பொருத்தமான பாதுகாப்பு ஏற்பாடு அல்ல என்றே அதிகாரிகளும் படையினரும்கருதுகின்றனர். பூநகரிமுகாம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியபோது ஒருதாக்குதல் அணிதானும் (Ambush Party) இவ்வாறு முன்னணியில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

தோடு அவை திறந்த வெளிகளிலேயே அதிகம் பயன் தரக்கூடியவை ஆகும். பூநகரியிலிருந்து முன்னேறுவதை நோக்கமாகக் கொண்டு அவை அங்கு வைக்கப்பட்டிருந்தன எனக்கூறுவது சிறுபிள்ளைத்தனமானதாகும் போரில் யுத்த டாங்கிகளின் அறிமுகமானது படையினர் மத்தியில் தவறான அபிப்பிராயங்களையே தோற்றுவித்துள்ளது யாழ்தேவி நடவடிக்கையின் போது டாங்கிகள் தாக்கி அழிக்கப்பட்டதை தொடர்ந்து படையினர் தரப்பில் பதற்றம் அதிகம் ஏற்பட்டது.

பூநகரியில் இராணுவம் ஏன் தங்கவைக்கப்பட்டுள்ளது என்ற பிரதானமான கேள்வியுடன் ஒப்பிடுகையில் இவை சிறியளவே. பூநகரிப்பகுதி 1991ல் மேற்கொள்ளப்பட்ட வலம்புரி நடவடிக்கையைத் தொடர்ந்து படையினர் வசமாகியது. குடாநாட்டை பிரதான தரைப்பகுதியிலிருந்து துண்டாடுவதும், குடாநாட்டிற்குள் அடிக்கடி தாக்குதல் நடத்துவதும் தான் அப்போது சண்டைக்கான திட்டமாக இருந்தது. ஆனால் கொப்பேகடுவ, விமலரத்தனா போன்றோர் கொல்லப்பட்டதை தொடர்ந்து இத் திட்டம் கைவிடப்பட்டது. கடற்படையினர் குடாக்கடலை கட்டுப்படுத்தாத நிலையில், அதற்கான ஆற்றலை அவர்கள் வெளிப்படுத்தாத நிலையில், குடாநாட்டின் கழுத்தை நெரிக்கும் முழுத்திட்டமும் தோல்வியே. இந்த நிலையில் தொடர்ந்தும் இராணுவம் பூநகரியில் தொங்கிக்கொண்டிருப்பது ஏன்?.. கொப்பேகடுவவின் மரணத்திற்குப் பின்னர் இராணுவத்திடம் குறுகிய கால அல்லது நீண்ட கால திட்டம் எதுவும் இல்லை என்பதுவே பிரச்சினைக்கு உரியதாகும்.

எதிர்காலத்திற்கான எந்தத் திட்டமும் இல்லாமல் எந்தப் பகுதியை தக்க வைத்திருப்

பௌத்த அரசிற்கும், பௌத்த அடிப்படைவாத கடும் போக்காளருக்கும் தமது விசுவாசத்தை வெளிக்காட்ட தமது சக்திக்கும், வரையறைக்கும் அப்பாற்பட்டும் செயற்பட வேண்டிய நிலை தவிர்க்க முடியாதது, ஆனால், அது எந்தளவிற்குச் சாத்தியமாகும், அவ்வாறு சாத்தியமானாலும் பௌத்த பேரினவாதிகளால் அது ஏற்றுக் கொள்ளப்படுமா? என்பதும் கேள்விக்குறியதே

ஏனெனில், ஆயுதப்படைத் தளபதிகள் முன்னுள்ள பொறுப்புக்கள் இன்று சிறியதல்ல, சிறிலங்கா அரசும், பௌத்த அடிப்படைவாதிகளும் எதிர்பார்ப்பது போன்று போரில் வெற்றி பெற வேண்டும், அதிலும் குறைந்த இழப்புக்களுடன் வெற்றியீட்ட வேண்டும்.

ஆனால், சிறிலங்கா ஆயுதப் படையோ தொடர்ச்சியான பல தோல்விகளால் பெரிதும் நொந்து போயுள்ளது. குறிப்பாக, இராணுவத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பு அதன் ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் சிதைத்துள்ளதோடு, அதன் யுத்த தந்திரோபாயமும் தோல்வி கண்டுள்ளது. மேலும் முரண்பாடுகளால் இராணுவம் பிளவுண்டு போயுள்ளது.

இந் நிலையில், இராணுவத்திற்கு புத்துயிரூட்டி, போருக்கு புதிய தந்திரோபாயம் வகுத்து அதனை வெற்றிப்பாதையில் வழி நடத்திச் செல்ல வேண்டும். இது எத்துணை நடைமுறைச் சாத்தியமாகக் கூடும். ஏனெனில், புலிகளுக்கு எதிரான போரில் ஜெரிசில்வா ஒன்றும் புதியவரல்ல கடந்த காலத்தில் புலிகளை ஒடுக்கவென தீவிரமாகச் செயற்பட்டு தோற்றுப் போனவர் தான். இந்நிலையில், புலிகளை வெற்றிகொள்ளும் புதிய திட்டத்தை இவரால் எப்படி வகுக்க முடியும்? இது ஏனைய தளபதிகளுக்கும் பொருந்தப் பாடானதே.

மேலும், புலிகள் முன்னரை விட தற்பொழுது ஆயுதபலத்திலும், போரை வழிநடத்துவதிலும் பெரு வளர்ச்சி கண்டுள்ளனர் என்பதுஅனைவராலும்ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பூநகரியில் பெறப்பட்ட ஆயுதங்கள் அவர்களுக்கு வலிமை சேர்த்துள்ளது. இந் நிலையில் இராணுவத்தின் தாக்குதலின் போதுபுலிகளின் பதிலடி பலமாகவே இருக்கும்என்பதில் சந்தேகம் தேவையில்லை.

இந் நிலையில், தளபதிகள் தமது, விசுவாசத்தை நிரூபிப்பதென்பது பெரும் சோதனை நிறைந்த ஒன்றாகவே இருக்கும். ஆனால், இச் சோதனைகளைத் தாண்டி இவர்கள் சிலவற்றில் தமது சாதனையைக் காட்டினாலும் பேரினவாதம் அதை பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொண்டு கௌரவிக்குமா என்பது சந்தேகமே.

ஏனெனில், தமிழர்களில்சிலர், தமதுஇனத்தைக்காட்டிக் கொடுத்தும், சிலர் தமது இனத்தைப்பற்றி கவலைப் படாமல், அரசியல் ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும் பௌத்த அரசிற்கு தமது விசுவாசத்தைக் காட்டி வந்துள்ளனர். இதனால், பௌத்த அரசு பல நன்மைகளையும் பெற்றுள்ளது. ஆயினும் ஒருபோதும் பௌத்த பேரினவாதிகள் அவர்களை அங்கீகரிக்கவில்லை. நன்றி விசுவாசத்தோடு பார்க்கவுமில்லை, ஏற்றுக்கொள்ளவுமில்லை.

மேலும், இராணுவத்தளபதி ஜெரிசில்வாவின் நியமனம்ஏதோ ஒருவகையில் சிக்கலுக்குரியதாகவும்உள்ளது. பதவிவிலகிச் செல்லும் பௌத்தரான இராணுவத்தளபதி சிசில்வைத்தியரெட்ணா அதனை ஏற்றுக்கொள்ளாததே ஒரு முரண்பாடுதான். இந்நிலையில் புதிய தளபதி தமது நன்றிவிசுவாசத்தைக்காட்ட யாகப்பர்தேவாலயம் போன்ற கிறிஸ்தவ தேவாலயங்கள்மீது தாக்குதலை நடத்தினும் அவருக்கு பௌத்த பேரினவாதிகளின் அங்கீகாரம் கிடைக்கப் பெறுமா என்பது கேள்வியே.

தோரும், அவர்களது வானொலித் தகவல்களை உற்றுக் கேட்டோரும் சில தினங்களுக்கு முன்பாகவே தாக்குதல் திட்டம்பற்றி உறுதிப்படுத்தினர்.

பூநகரி முகாமிலுள்ள உயர் அதிகாரிகள் தகவல்கள் சேகரிப்பதற்காக விடுதலைப்புலிகளின் ஊடுருவல்கள் பல தடவை இருந்ததாகக் கூறியுள்ளனர் முன்னணிக்காவலரண்களைக் கடந்து தகவல் சேகரிப்பதற்காக ஊடுருவிய விடுதலைப் புலிகளில் பதினைந்து பேர் படையினரால் கொல்லப்பட்டதும் உண்மையே. 1991-ல் ஆனையிறவு முகாமின் மீதான தாக்குதலின் படிப்பினைகளைத் தொடர்ந்து, பூநகரி முகாம் மீதான தாக்குதலுக்கு இரு வாரத்திற்கு முன்பே அம் முகாமின் வரைபடங்கள் முழுவதையும் அவர்கள் தெளிவாகத் தெரிந்துகொண்டுவிட்டனர். யாழ்தேவி இராணுவ நடவடிக்கையின் காரணமாக புலிகள் தமது திட்டத்தை ஒத்திவைக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். எனினும் அவர்கள் விரைவிலேயே சுதாகரித்துக் கொண்டுவிட்டனர்.

காரைநகர் கடற்படைத் தளத்திலும், பலாலி இராணுவ முகாமிலும் கடமையில் இருந்த புலனாய்வாளர்கள், இரவு 11.30 மணியளவில் விடுதலைப் புலிகளின் தகவல் தொடர்பு சாதனங்களின் ஒலியலைகள் பல காற்றில் வருவதனை அவதானித்தனர். இரு நிலைகளில் இருந்தும் பலாலியிலுள்ள இராணுவ நடவடிக்கை அலுவலகத்திற்கு செய்திகள் அனுப்பப்பட்டதை தொடர்ந்து குடாநாட்டிலுள்ள அனைத்து இராணுவ நிலைகளும் உசார் படுத்தப்பட்டன. பூநகரியைக் கட்டுப்படுத்தும் ஊர்காவற்துறையின் பிரிகேட் தலைமையகத்திற்கும் இச் செய்தி

னைசெய்வதையும் குறிப்பது என்பதுடன், ஒவ்வொருபடையினரும்தினசரிஒருதடவையாவது இவ்வாறுசெய்தல் வேண்டும் என்பதும் கட்டாயமானதாகும்- எப்படியாயினும், காயம்பட்டிருக்கும் டசின் கணக்கான படையினரில் எவரும் தாம் ''ஸ்ரான்ட் 2'' நடவடிக்கையிலிருந்தது பற்றி குறிப்பிடவில்லை என்பதுடன் தாக்குதல் தொடங்கியபோது தாம் ஆச்சரியத்திற்குள்ளானதாகவும் கூறியுள்ளனர்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை தமது தயாரிப்பு வேலைகளை மிகவும் திறம்பட செய்திருந்தனர் என்பதும், அது அவர்களுக்கு பிரமாதமான பலனைக் கொடுத்ததுஎன்பதும் கவனிக்கத்தக்கது- கனரக மோட்டார்கள் இருந்த நிலைகள் காலாட்படைத் தலைமையகம், ரி-55 தாங்கியின் நிலைகள் என்பன ஏககாலத்தில் புலிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகின- இந்த நிலைகள் அவர்களிடம் வீழ்ச்சி அடைந்ததும், பிரதான தாக்குதல்கள் தொடங்கப்பட்டன. லெப். கேணல் சில்வா தனது தலைமையகத்திலிருந்து உடனடியாக வெளியேறியதுடன், கஜபா தலைமையகத்திற்கு பின்வாங்கிச் சென்றார். இரண்டு தாங்கிகள், கனரக மோட்டார்கள் மற்றும் பெருமளவு இழப்புக்கள் என்பன இலகு காலாட்படையின் கட்டுப்பாட்டிலிருந்த பகுதியிலேயே ஏற்பட்டுள்ளது. உண்மையைச் சொன்னால் காலாட்படையின் ஆயுதக் களஞ்சியம் முழுவதுமே புலிகள் வசமாகின. எனினும் லெப். கேணல் சில்வாதான் படையினரை மீண்டும் ஒருங்கு திரட்டி இரண்டு இரவுகளுக்கும் மேலாக தாக்குப்பிடிக்க வழிகோலியவர் ஆவார். இருந்தபோதும் களத்திலேயே வைத்து இந்த

தெரிகின்றது. முதல் சில மணித்தியாலங்களில் புலிகள் பெற்ற பெரும் வெற்றியைப் பயன்படுத்தி அப்போது பெரும் விரக்திக்குள்ளாகியிருந்த படையினரைத் துரத்திச் சென்று தாக்காதது ஏன் என்பது இன்னமும் தெளிவு படுத்தப்படவில்லை. அந்த இரவில் அவர்கள் தாக்குதலைத் தொடராதது இராணுவத்தினருக்கு பெருமளவு நேரத்தைப் பெற்றுக் கொடுத்துவிட்டது- புலிகள் அடுத்த தாக்குதலை நடத்த 24 மணி நேரத்திற்குமேல் எடுத்தபோது இராணுவத்தினர் திருப்பித்தாக்கக் கூடியளவுக்கு தமது நிலையைப் பலப்படுத்திக் கொண்டுவிட்டனர். வான் தாக்குதல் பாதுகாப்புத்தான் ஒரேயொரு வித்தியாசமாக இருந்தது.

காலநிலை சீரற்று இருந்தமையால் விமானப் படையின் உதவி கிடைப்பது. சிரமமாகியது. காலநிலை சீராகியமறு நாளில் விமானப்படையினர் தாக்குதல் நடத்தினர்.

பூநகரித்தாக்குதல்இராணுவத் தலைமையின் இயலாமையை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டிய ஒன்றாகும். முப்படைகளின் தளபதிகளும் தாக்குதல் தொடங்கிய மறுநாட் காலையே பலாலி இராணுவத் தளத்திற்கு சென்றுவிட்ட போதும் கூட மீட்பு நடவடிக்கை எதையும் திட்டமிடக் கூடிய அளவுக்கு ஒத்த கருத்துக்கள் காணப்படவில்லை. ஒவ்வொரு திட்டமும் யாரோ ஒருவரால் நிராகரிக்கப்பட்டு வந்தது ஆபத்துகளைப் பொறுப்பேற்க எந்தத் தளபதியும் தயாராக இல்லாத நிலையில் மீட்பு நடவடிக்கையே கைவிடப்படும் நிலை காணப்பட்டது. இந்தச் சூழ்நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலையிட்

நிறுவி முகாம்களைப் பாதுகாக்கும் தந்திரோபாயத்தில் அதிக நம்பிக்கை கொள்ள முடியாது என்று இராணுவ அதிகாரிகள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர். ஏனெனில் விடுதலைப்புலிகள் இதனை முறியடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர், முகாம்களிலிருந்து முன்னேறி தனித்தனியாக அமைக்கப்படும் இக் காவல் நிலைகள் பொருத்தமான பாதுகாப்பு ஏற்பாடு அல்ல என்றே அதிகாரிகளும் படையினரும்கருது கின்றனர். பூநகரிமுகாம் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியபோது ஒருதாக்குதல் அணிதானும் (Ambush Party) இவ்வாறு முன்னணியில் இருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது

ராணுவபுலனாய்வாளர்கள் விடுத்த எச்சரிக்கைகளையும் மீறி பூநகரி இராணுவமுகாமின் உட்பகுதிக்குள விடுதலைப்புலிகள் ஊடுருவி முக்கிய இடங்கள் குறித்த தகவல்களைப் பெற்றுள்ளனர். பூநகரிமுகாமின் பாதுகாப்பாளர்கள் இது குறித்துக் கவலைப்படவில்லை என்பதுடன் தமது பாதுகாப்பு நிலைகளை மாற்றிஅமைப்பதிலோ கனரக மோட்டார்கள் டாங்கிகளின் நிலையை மாற்றுவதிலோ ஈடுபடவில்லை ஒரு முறை ஓரிடத்தில் வைக்கப்பட்டவை மிக அரிதாகவே இடம் மாற்றப்படுகின்றமையானது புலிகளுக்கு பெரும் நன்மையாகவே முடிந்துள்ளது

பூநகரியில் இருந்த இரு ரி 55 டாங்கிகளும் என்ன செய்து கொண்டிருந்தன என்பது இன்னுமொரு கேள்வியாகும். யுத்த டாங்கிகள் எதிர்ப்பு ஆயுதங்கள் என்ப

டாந்து இத் திட்டம் வகுக்கப் பட்டது. கடற்படையினர் குடாக்கடலை கட்டுப்படுத்தாத நிலையில், அதற்கான ஆற்றலை அவர்கள் வெளிப்படுத்தாத நிலையில், குடாநாட்டின் கழுத்தை நெரிக்கும் முழுத்திட்டமும் தோல்வியே. இந்த நிலையில் தொடர்ந்தும் இராணுவம் பூநகரியில் தொங்கிக்கொண்டிருப்பது ஏன்?.. கொப்பேகடுவவின் மரணத்திற்குப் பின்னர் இராணுவத்திடம் குறுகிய கால அல்லது நீண்ட கால திட்டம் எதுவும் இல்லை என்பதுவே பிரச்சினைக்கு உரியதாகும்.

எதிர்காலத்திற்கான எந்தத் திட்டமும் இல்லாமல் எந்தப் பகுதியை தக்க வைத்திருப்பது எந்தப்பகுதியை கைவிடுவது என்று தீர்மானிப்பது இராணுவத்திற்கு இலகுவானதல்ல. இந்த முடிவுகளற்ற நிலையானது பெருமளவு துருப்பினர் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது எனக் கருதப்படும் பகுதிகளில் முடங்கிக்கிடக்கவே வகை செய்கிறது.

ஒன்றுக்குப்பின் ஒன்றாக பல தோல்விகளை தொடர்ந்து சந்தித்ததுக்கொண்டுள்ள இராணுவத்தினர் மத்தியில் கட்டுப்பாட்டு உணர்வையும், மனோ பலத்தையும் எப்படிப்பேண முடியும். ராணுவத்தலைமைகளில் இருப்போர் ஓர் இடத்தில் உட்கார்ந்து ஒரு திட்டத்தை வரைவதற்கு இசைவு தெரிவிக்காத வரையில் பூநகரி போன்ற பேரழிவுகள் மீண்டும் தொடர்வதை தடுப்பது சிரமமானதே

## ஜனாதிபதி டி. பி. நீராட 'பீதுருதாலகால' நீர்

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி டிங்கிரி பண்டா விஜேதுங்க குளிப்பதற்கான நீரை பீதுருதாலகால நீர்வீழ்ச்சி பகுதியில் இருந்து பௌசர் மூலம் கொழும்புக்கு கொண்டுவருவது தொடர்பாக விரிவாக ஆராயப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது

இதுவரை காலம் பியமதலாவை பகுதியில் வரும் நீர் வீழ்ச்சியில் இவர் குளித்து வந்தார். என்றும், சிறிலங்காவின் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் கூட அப்பகுதிக்கு சென்று குளித்து வருகின்றார் என்றும் இவர் அங்கு செல்வதற்கு உலங்கு வானூர்தி பாவித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

இதே வேளை இவர் இங்கு செல்வதற்கு பாதுகாப்பு முன்னேற்பாடு செய்யவும் இவரின் பாதுகாப்புக்கு சுமார் 25க்கு மேற்பட்ட விஷேட அதிரடிப் படையினர் அனுப்பப்பட வேண்டியிருப்பதால் ஏற்படும் செலவினத்தைவிட பௌசர் மூலம் கொண்டுவரும் செலவினம் குறைவாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. பாதுகாப்பு செலவினம் காரணத்தை மையமாக கொண்டே இந்த நடவடிக்கை தொடர்பாக ஆராயபடுகின்றதாக மேலும் தெரிய வருகின்றது.

## சேவை நலம் பாராட்டு

வடமராட்சி கல்விக்கோட்டத்தின் பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. எஸ் செல்லத்துரை ஓய்வு பெற்றதையடுத்து அவருக்கு பருத்தித்துறை கோட்ட அலுவலகத்தில் சேவை நலம் பாராட்டு வைபவம் நடைபெற்றது.

இப்பாராட்டு வைபவத்தின் போது பருத்தித்துறை கோட்டப்பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு.செல்வரத்தினம் ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு ஏகாம்பரநாதன் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் ஆசிரியர்கள் அதிபர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இக்கோட்டத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளராக திரு. செல்வரத்தினம் தனது புதிய பதவியை பாரமேற்றுள்ளார். (யோ)

## ஜனாதிபதியை சந்திக்க சிறிமாவோ விருப்பம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு யுத்த நிலை தொடர்பாக சிறிலங்கா ஜனாதிபதியுடன் விரிவான கலந்துரையாடலொன்றிற்கு ஏற்பாடு செய்து தருமாறும் எதிர்க்கட்சித்தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா ஜனாதிபதியின் செயலாளர் கே. எச், ஜீ விஜயதாசாவை கடிதமூலம் கேட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு நிலைமை தொடர்பாக தானும், அதாவுட செனவிரத்ன, தினேஷ் குணவர்த்தன உட்பட எதிர்க்கட்சித் தலைவர்கள் சிலரும் உரையாட விரும்புவதாகவும் இதற்கு தேவையான ஒழுங்குகள்மேற்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

## காடுவளர்ப்பு செயற்திட்டம்

உவர் ஏரிக்கரையில் காடுகள் வளர்க்கும் செயற்திட்டமொன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுநிறுவனம் ஆரம்பித்துள்ளது. வாதரவத்தை கிராமத்தையடுத்துள்ள வேலங்காடு உவர் ஏரிப்பகுதியில் சவுக்கம் கன்றுகள். வெள்வேலிக் கன்றுகள் மற்றும் கொய்யா, எலுமிச்சை தென்னம்பிள்ளை போன்றவை நடப்பட்டுள்ளன.

கணபதி துணை

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் எழுதிய

## வெட்டு முகம்

(சிறுகதைத் தொகுதி)

## வெளியீட்டு விழா

இடம்:- கைலாசபதி கலையரங்கு (யாழ் பல்கலைக்கழகம்)
காலம்:- 20-12-1993 (இன்று மாலை 3.00 மணி)
வரவேற்பு:- த. குறிஞ்சிக் குமரன் அவர்கள்
தலைமை:- புதுவை இரத்தினதுரை அவர்கள்.
முதற்பிரதி பெறுநர்:- எஸ். பி. நடராசா அவர்கள்.
வெளியீடு:- இ முருகையன் அவர்கள்.
மதிப்பீடு:- க. தணிகாசலம் அவர்கள்
செம்பியன் செல்வன் அவர்கள்.
கலாநிதி சோ. கிருஸ்ணராசா அவர்கள்.
பதிலுரை:- இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் அவர்கள்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

வாழ்த்துபவர்கள்

ராதிகா ஜுவல்லர்ஸ்
222. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (6934)



## பாராட்டுகின்றோம்

வேலணைக் கோட்ட மண்டைதீவுக் கொத்தணியில் முன்னோடிப் பாடசாலையாக விளங்கும் மண்கும்பான் அ த. க வித்தியாலய மாணவிகள் செல்விகள் ச ஜசித்ரா, ச. ஜனித்ரா ஆகியோர் 1993 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையைப் பாராட்டுவதுடன் வகுப்பாசிரியை செல்வி ந. புஸ்பராணியையும் பாராட்டுகின்றோம்

பா. அ. சபை, ப. மா- சங்கம்,
ஆசிரியர் கழகம், மண் கும்பான்
அ. த. க. பாடசாலை
வேலணை.
(6937)


## ஓராண்டு, 31-ம் நாள் நினைவஞ்சலி



# போரை எதிர்கொள்வதற்கு தேசிய பாதுகாப்பு அமைச்சர் தேவை

### ஓய்வு பெற்ற படைஅதிகாரிகள் சிபார்சு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான போரை எதிர்கொள்ள தேசிய பாதுகாப்புதுறை அமைச்சர் என ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என்றும் புலிகளுக்கு எதிராக போரிடக்கூடிய புதிய படை ஒன்றை ஏற்படுத்த வேண்டும் எனவும் முன்னாள் படைத் தளபதிகள் குழு ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவிற்கு சிபார்சு செய்துள்ளனர்.

பூநகரியில் பலத்த பின்னடைவைச் சந்தித்தபோதிலும் இராணுவம் போராளிகளுக்கு எதிராக போராடியே ஆகவேண்டும் என அவர்கள் கூறியுள்ளனர். இக் குழுவில் இராணுவ, கடற்படை, விமானப் படைகளின் ஓய்வு பெற்ற தளபதிகள் அடங்கியுள்ளனர்.

### தேசத்துரோகம்

தொடர்பு வைத்திருந்த இராணுவ உளவாளிகளுடன் தொடர்புகள் ஏற்படுத்தி அவர்களையும் காட்டிக் கொடுப்பவர்களாக மாற்றியுள்ளார். அத்துடன் புளொட் சமூகவிரோதக் கும்பலுடனும் இரகசியத் தொடர்பு வைத்திருந்தார்.

### கந்தசாமி கலைச்சந்திரன் (சந்திரன்) (வயது 28)

அராலி வீதி, சங்கானை
யாழ்ப்பாணம்.

இவர் வவுனியா சென்று வரும்போது இராணுவ உளவாளிகளுடனும், புளொட் சமூக விரோதக் கும்பல்களுடனும் தொடர்பை ஏற்படுத்தி எமது இயக்கம் பற்றிய தகவல்களை வரைபடங்கள் மூலம் வழங்கி வந்துள்ளார். இதற்காக தடைசெய்யப்பட்ட பொருள்கள் கொண்டு வருவதற்கான அனுமதியையும் பெற்று பொருள்கள் கொண்டு வந்துள்ளார். முகாம்கள் பற்றிய விபரத்தையும் அதற்குரிய வரைபடங்களையும் எடுத்துச் செல்லும்போது கைது செய்யப்பட்டார். இவர் முன்னர் குறிப்பிட்ட பழனி தங்கவேல்(புலவர்) மூலமாகவே இராணுவ உளவாளிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி இருந்தார்.

### செல்லர் சௌந்திரராஜன் (வயது 24)

இல 07 மந்துவில் கிழக்கு குடியிருப்புத் திட்டம், கொடிகாமம்.

இவர் வெளிநாடு செல்வதற்காக கொழும்பில் தங்கிநின்ற இளைஞர்களை புளொட் சமூக விரோதக் கும்பலிற்கு காட்டிக் கொடுத்துப் பணம்

### வல்லிபுரம் சந்திரசேகரம் (சந்திரன்) (வயது 32)

17-ம் கட்டை, வல்லிபுனம், முல்லைத்தீவு வீதி, புதுக்குடியிருப்பு.

இவர் நான்குமுகாம்களைக் காட்டிக் கொடுத்துள்ளார். இதில் இரண்டு விமானத்தாக்குதல்களுக்குள்ளாகியுள்ளன. இராணுவ உளவுப்பிரிவுடன் தான் தொடர்பு வைத்திருந்தது மட்டுமல்லாமல் வேறு சிலரையும் தொடர்பு படுத்தியுள்ளார் சுன்னாகம் பகுதியில் ஒரு முகாமையும் இயக்கச்சிப் பகுதியில் எமது நிலைகளையும் வெவ்வேறு நாட்களில் உலங்கு வானூர்தியில் சென்று நேரடியாகக் காட்டிக் கொடுத்துள்ளார்.

### மரியதாஸ் தேவதாஸ் (வயது 43)

பத்தினியம்மாள் குளம், வவுனியா.

இவர் வவுனியா சென்று வந்த வேளையில் இராணுவ உளவாளிகளுடன்தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு ஜோசப் இராணுவ முகாம் சென்று எமது இயக்கம் பற்றியும் இயக்க முகாம்கள் பற்றியும் தகவல்களைத் தொடர்ச்சியாக வழங்கி வந்துள்ளார். எமது பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்கான இராணுவ நகர்வு நடவடிக்கைக்காக முன்கூட்டியே எமது நிலைகள் உள்ள பகுதிக்கு வந்து அவதானித்து எமது முன்னேற்பாடுகள் இல்லாத பகுதியினூடாக இராணுவத்தினர் நகர உறுதுணையாக இருந்துள்ளார்

### தியாகராசா சண்முகநாதன் (கட்டையன், செல்வா. கண்ணாடி,

## புனித தோமையார் திருவிழா

(யாழ்ப்பாணம்)

மாதகல் புனித - தோமையார் திருவிழா நாளை காலை 7 00 மணிக்கு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் என மாதகல் தோமையார் கோவில் நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

# வெள்ள நிவாரண நிதி அரச அதிபர் கோருகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மறுபடியும் கடும் மழை பெய்வதால் பல இடங்கள் நீரில் மூழ்கி உள்ளன. அதிக எண்ணிக்கையுள்ள குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டு பள்ளிக் கூடங்களிலும், வணக்கத் தலங்களிலும் தங்கியுள்ளனர். உங்கள் அனுமதியை எதிர்பார்த்து மூன்று நாள்களுக்கு உணவையும் மற்றும் ஒரு கிழமைக்கு உலர்உணவுப் பொருள்களையும்வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறு யாழ். அரச அதிபர் கே மாணிக்கவாசகர் கொழும்பு சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளருக்கு அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார். இந்த வேண்டுகோள் சர்வதேச செஞ்சிலுவைக் குழு ஊடாக நேற்று அனுப்பப்பட்டது.

உங்களிடம் கடந்த கிழமை முதல் கோரப்பட்ட 9 மில்லியன் ரூபாவில் தரப்பட்ட 15. மில்லியன் ரூபாவை விட இப்போது ஏற்படக்கூடிய செலவுகள் வேறானதாகும். மிகுதிப் பணம் கூடிய கெதியில் தரப்படும் என்ற நம்பிக்கையிலேயே மேற்படி தொகை தரப்பட்டது. பாதிக்கப்பட்ட பிரிவுகளிலிருந்து விபரங்கள் கிடைத்ததும் இன்னுமொரு அறிக்கை உங்களுக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று யாழ். அரச அதிபரின் வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பயங்கரவாத பிரச்சினை என்றால் பேச்சுக்கள் நடைபெற்றது ஏன்?

### காமினி திசநாயக்கா கேட்கிறார்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரச்சினை பயங்கரவாத பிரச்சினை என்றால் சயனைட் குப்பியை கழுத்தில் தொங்கப் போட்டுகொண்டு தமது உயிரையே வேண்டாம் என்று புலிகள் ஏன் யுத்தம் செய்ய வேண்டும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும் என ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திசநாயக்கா சந்தேசியவிற்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்; வடக்கு கிழக்கு பிரச்சினை ஓர் பயங்கரவாத பிரச்சினை என்று சொல்லப்படுமாயின் முன்னைய காலங்களின் தமிழ் அரசியல் தலைவர்களும் சிங்கள அரசியல் தலைவர்களும் செய்து கொண்ட அரசியல் ஒப்பந்தம் மற்றும் தெரிவுக்குழு, வட்டமேசை மாநாடுகள், இந்திய - இலங்கை ஒப்பந்தம் போன்றவை ஏன் செய்திருக்க வேண்டும். நேற்று முன்தினம் சிறிலங்கா ஜனாதிபதி தனது கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தில் வடக்கே பயங்கரவாத பிரச்சினையே உள்ளது என வலியுறுத்திக் கூறினார் இவரது நடவடிக்கை பிரச்சினையை மேலும் சிக்கலடையச் செய்யும் சிறிலங்கா ஜனாதிபதியின் குறுகிய அரசியல் நோக்கத்தினால் இன்று வடக்கு கிழக்கில் நடைபெறும் சண்டை மலையகத்தை நோக்கிவரும் ஆபத்து உள்ளது. இவ்வாறு ஒரு நிலை ஏற்படுமாயின் மலையகத்தின் பொருளாதாரமும், நாட்டின் பொருளாதாரமும் முற்றாக சரிந்துவிடும். எனவே தொண்டமானின் நியாயமான கோரிக்கை நிறைவேற்றபடாதுபோனால் போராட்டமும், 'பயங்கரவாத' நடவடிக்கையும் ஆரம்பமாகும் என்றார்.

### மக்கள் விழிப்பாக

இதுபோன்ற அற்ப ஆசைகளுக்காக எமது மக்களையும் தேசத்தையும் காட்டிக் கொடுத்து தேசத்துரோகக் குற்ற மிழைத்த 9பேர் எம்மால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீதான தொடர் விசாரணைகளின் போது குற்றங்கள் நிரூபிக்கப் பட்டதன்பேரில் இவர்கள் 9பேருக்கும் அதிஉயர் தண்டனையான மரணதண்டனை வழங்கப்படுகிறது.

இவர்கள் தமது தேசத்தையும், மக்களையும் நினைக்காதுவிடினும் தத்தமது குடும்பங்களையாவது நினைத்துப் பார்த்தார்களா? இவர்கள் ஒவ்வொருவருடைய மனைவிமார் மற்றும் பிள்ளைகள் எமக்குஎழுதுகின்ற கண்ணீர்க் கடிதங்களில் இருந்து இவர்க

# தென்மராட்சிப் பகுதியில் புதியவகை காய்ச்சல்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் புதுவகையான காய்ச்சல் பரவிவருகிறது. இக்காய்ச்சல் நோயாளர்களால் சாவகச்சேரி மருத்துவமனை வெளிநோயாளர் பகுதி நிரம்பி வழிகிறது. பலர் விடுதிகளி லும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### வயோதிபர் மரணம்

இக்காய்ச்சலுக்கு உள்ளாகிய மிருசுவில் வடக்கைச் சேர்ந்த எஸ் சிதம்பரப்பிள்ளை (70) என்னும் வயோதிபர் மரணமானார். இக்காய்ச்சல் நுளம்பினால் பரவி வருவதாக சந்தேகிக்கப்படுகிறது. (86)

### யாழ் குடாநாடு



## 2-ம்லெப். கடற்புலி இசைவாணன்

பரமசிவம் (துரைஐயா) பத்மராஜா

பிறப்பு **16-4-1973** — வீரச்சாவு **20-11-1992**

புயலினை எதிர்த்து அலைகளில் பிறந்தவன்
கடற்புலிகளில் இணைந்து போரினில் நின்றவன்
விடியலைத்தேடி தாயக மண்ணினில் திரிந்தவன்
விடுதலை வேள்விக்கு வித்தாகி புதைந்தவன்

சூரியவெளி, நாவாந்துறை. (சி/8170) — துரைஐயா குடும்பத்தினர்

## 1-ம்ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17-06-1923

மறைவு 31-12-1992

### அமரர் தம்பு நல்லையா
### திதி 20-12-1993

இல்லத்தின் தலைவனென எழிலோடு வாழ்ந்திருந்து
இக மீதில் எங்களுக்கு வளமாகும் வாழ்வுதந்து
நல்லோனாய் வல்லோனாய் நாணயத்தில் மிக்கோனாய்
நாயன்மார் கட்டதனில் நன்மகனென்றுரைத்திடவே
பல்லாண்டு பணிபுரிந்து பரையவளாம் ே ய்ச்சியது
பாதமதைப் பாங்குறவே பணிந்துவந்து
எல்லோரும் சென்றடையும் இறையின் தாழில்
இணைந்தீரே பெற்றிடுவீர் என்றும் சாந்தி

இல. 38, அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். (6935) — குடும்பத்தினர்

யும் பெற்று பொருள் ஆ வி கொண்டு வந்துள்ளார். முகாம்கள் பற்றிய விபரத்தையும் அதற்குரிய வரைபடங்களையும் எடுத்துச் செல்லும்போது கைது செய்யப்பட்டார். இவர் முன்னர் குறிப்பிட்ட பழனி தங்கவேல்(புலவர்) மூலமாகவே இராணுவ உளவாளிகளுடன் தொடர்பை ஏற்படுத்தி இருந்தார்.

### செல்லர் சௌந்திரராஜன் (வயது 24)

இல 07 மந்துவில் கிழக்கு குடியிருப்புத் திட்டம், கொடிகாமம்.

இவர் வெளிநாடு செல்வதற்காக கொழும்பில் தங்கிநின்ற இளைஞர்களை புளொட் சமூக விரோதக் கும்பலிற்கு காட்டிக் கொடுத்துப் பணம் சம்பாதித்துள்ளார். இதில் பலரைக் கைதுசெய்து பணத்தைப் பெற்றதன் பின்பு விடுதலை செய்துள்ளார். இதைவிட அங்கு தங்கிநின்ற இளைஞர்கள் மேலும் சிலரை புளொட் சமூக விரோதக் கும்பலின் வாகனத்தில் அவர்களுடன் நேரடியாகச் சென்று கைதுசெய்துள்ளார். புளொட்டினருடன் கொழும்பில் இயங்கிவந்த இவர் மேலதிக தகவல்களைப் பெறும்பொருட்டு யாழ்ப்பாணம் வந்த வேளையில் கைது செய்யப்பட்டார்

### முருகுப்பிள்ளை சத்தியராஜா (சத்தி) (வயது39)

அக்கராயன் குளம், கிளிநொச்சி.

இவர் எமது ஆதரவாளர் போல் தன்னை இனங்காட்டிக் கொண்டு இராணுவ உளவாளிகளுடன் தொடர்பு வைத்து தகவல்களைக் கொடுத்து வந்துள்ளார். இராணுவப் புலனாய்வு அதிகாரிளுடன் சேர்ந்து மது அருந்தி அந்த மது போதைக்காகவே எமது பல முகாம்களைக் காட்டிக் கொடுத்துள்ளார்.

உளவாளிகளுடன்தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு ஜோசப் இராணுவ முகாம் சென்று எமது இயக்கம் பற்றியும் இயக்க முகாம்கள் பற்றியும் தகவல்களைத் தொடர்ச்சியாக வழங்கி வந்துள்ளார். எமது பிரதேசத்தைக் கைப்பற்றுவதற்கான இராணுவ நகர்வு நடவடிக்கைக்காக முன்கூட்டியே எமது நிலைகள் உள்ள பகுதிக்கு வந்து அவதானித்து எமது முன்னேற்பாடுகள் இல்லாத பகுதியினூடாக இராணுவத்தினர் நகர உறுதுணையாக இருந்துள்ளார்

### தியாகராசா சண்முகநாதன் (கட்டையன், செல்வா. கண்ணாடி, கரடி) (வயது 29)

ஐயனார் வீதி, கல்வயல், சாவகச்சேரி.

இவர் வவுனியா சென்று வரும் பொழுது இராணுவ உளவாளிகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார். இதன் மூலம் தடை செய்யப்பட்ட பொருள்களை சன்மானமாகப் பெற்று முகாம்களின் அமைவிடங்களைக் காட்டிக் கொடுப்பதுடன் இயக்க உறுப்பினர்களின் செயற்பாடுகளையும் அறிந்து எதிரிக்குத் தெரியப்படுத்தி வந்துள்ளார்.

### சாமிவேல் ஆறுமுகம் (இரத்தினம்)(வயது37)

மடுக்குளம், வேலங்குளம்.

இவர் வவுனியா சென்று வரும் போது புளொட் சமூக விரோதக் கும்பலுடனும் இராணுவத்துடனும் தொடர்பை ஏற்படுத்தி தகவல்களை வழங்கிக் கொண்டிருந்தார். வட குதியில் நிரந்தரமாக நிலைகொண்டிருந்த முக்கிய உளவாளிகளிற்கும் சிறிலங்காப் படையினருக்குமான தொடர்பாளராகவும் செயற்பட்டுள்ளார்.

இதுபோன்ற அற்ப ஆசைகளுக்காக எமது மக்களையும் தேசத்தையும் காட்டிக் கொடுத்து தேசத்துரோகக் குற்ற மிழைத்த 9பேர் எம்மால் கைது செய்யப்பட்டனர். இவர்கள் மீதான தொடர் விசாரணைகளின் போது குற்றங்கள் நிரூபிக்கப் பட்டதன்பேரில் இவர்கள் 9பேருக்கும் அதிஉயர் தண்டனையான மரணதண்டனை வழங்கப்படுகிறது.

இவர்கள் தமது தேசத்தையும், மக்களையும் நினைக்காதுவிடினும் தத்தமது குடும்பங்களையாவது நினைத்துப் பார்த்தார்களா? இவர்கள் ஒவ்வொருவருடைய மனைவிமார் மற்றும் பிள்ளைகள் எமக்குஎழுதுகின்ற கண்ணீர்க் கடிதங்களில் இருந்து இவர்களது குடும்ப நிலைகளைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

எனினும் இதைவிட எமது மக்களினாலும் போராளிகளின் தியாகங்களினாலும் கட்டி எழுப்பப்படும் எமது தேசத்திற்கு கேடு விளைவிப்பதுமட்டுமல்ல தியாகங்களைக் கூட இவர்களது இத்தகைய செயல்கள் அர்த்தமற்றதாக்கி விடுகின்றன. இந்த நிலையில் நாம் ஓர் இறுக்கமான முடிவை எடுக்க வேண்டியவர்களாகவுள்ளோம்.

எனவே இவர்களைப் போன்று எம்மத்தியில் செயற்படுபவர்களை இனம்காணும் வகையில் உங்கள் வதிவடங்களுக்கு அருகாமையில் அல்லது நீங்கள் சென்றுவரும் இடங்களில் சந்தேகம் ஏற்படும் வண்ணம் நடமாடுபவர்கள் பற்றி நேரடியாகவோ அல்லது வேறு வழியிலோ அறியும் விபரங்களை உடனடியாக அருகிலுள்ள இயக்க முகாம்களிலோ அல்லது கடிதங்கள் மூலமோ எமக்கு தெரியப்படுததும்படி கேட்டுக்கொள்கிறோம் என அவர் தமிழீழ மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

க வேண்டும். நேற்று முன் தினம் ஸ்ரீலங்கா ஜனாதிபதி தனது கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தில் வடக்கே பயங்கரவாத பிரச்சினையே நிறைவேற்றபடாதுபோனால் போராட்டமும், 'பயங்கரவாத' நடவடிக்கையும் ஆரம்பமாகும் என்றார்.

## தென்மராட்சிப் பகுதியில் புதியவகை காய்ச்சல்

### வயோதிபர் மரணம்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் புதுவகையான காய்ச்சல் பரவிவருகிறது. இக்காய்ச்சல் நோயாளர்களால் சாவகச்சேரி மருத்துவமனை வெளிநோயாளர் பகுதி நிரம்பி வழிகிறது. பலர் விடுதிகளிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இக்காய்ச்சலுக்கு உள்ளாகிய மிருசுவில் வடக்கைச் சேர்ந்த எஸ் சிதம்பரப்பிள்ளை (70) என்னும் வயோதிபர் மரணமானார். இக்காய்ச்சல் நுளம்பினால் பரவி வருவதாக சந்தேகிக்கப்படுகிறது. (86)

---

### யாழ் குடாநாடு

அறிவிக்கின்றார்.

இதேவேளை வலிகாமம் பகுதி இடம் பெயர்ந்தோர் முகாம்களில் வாழும் மக்களுக்கு தேவையான முதலுதவிகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் வழங்கி வருகிறது. உடுவில் பகுதி முகாம் மக்களுக்கு உடுவில் பிரதேச இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் சமைத்த உணவுகளை வழங்கியது. (86, 09, 11)

---

### சூறாவளி

வடமேற்கு, கிழக்கு பகுதிகளில் அடிக்கடி மழை பெய்யும் எனவும் கொழும்பு வானிலை அவதான நிலையம் அறிவித்தது

---

### வன்னிப் பகுதி

யில் உள்ளது.

முல்லை மாவட்டத்தில் உடையார்கட்டு குளம் முறிப்புக்குளம், முத்தையன்கட்டு குளம் உடைப்பெடுக்கும் நிலையிலுள்ளன மேலும் பல சிறுகுளங்கள் உடைப்பெடுத்துள்ளன. முத்தையன்கட்டு குளத்தை பாதுகாக்க பொறியியலாளரும், பொதுமக்களும் முயற்சிசெய்து வருகின்றனர்.

இம்மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பணியிலும் மீட்புப் பணியிலும் விடுதலைப் புலிகளின் விசேட மீட்பு படையணியினர் ஈடுபட்டுவருகின்றனர் இவர்களுடன் தனியார் நிறுவனங்களும் ஈடுபட்டுவருகின்றன.

---

### 'நான்' வெளிவந்துள்ளது

'நான்' உளவியல் சஞ்சிகையின் ஐப்பசி-மார்கழி மாத வெளியீடு அண்மையில் வெளிவந்துள்ளது 'நம்பிக்கை மனிதனின் தும்பிக்கை' என்ற தலைப்பில் ரூபன் மரியாம்பிள்ளையும், 'கவலையின்றி வாழுதல்' என்ற தலைப்பில் கோகிலா மகேந்திரனும், 'கவலைகளைக் கலைக்கலாமா' என்ற தலைப்பில் டி இ. ரட்ணராஜாவும் எழுதியுள்ள ஆக்கங்களுடன் சிறுகதை கவிதை எனப் பல்வேறு அம்சங்களையும் தாங்கி பண்டிகைகால இதழாக இது மலர்ந்துள்ளது


நத்தார் புதுவருட பண்டிகைகளை முன்னிட்டு

★ மலிவு விற்பனை ★

சகல வகையான கேக், பலரக குளிர்பான தயாரிப்பு பொருள்கள் மற்றும் பழவற்றல், பால்மா, பிஸ்கட், ரொபி, சொக்கலட்.

பாலன் பிறப்புக்காட்சிப் பொருள்கள், பிறந்தநாள், திருமண வைபவங்களுக்கு ஏற்ற பொம்மைகள், மெழுகுதிரிகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்

கணேஷா வர்த்தக நிலையம்

65, கஸ்தூரியார் வீதி — யாழ்ப்பாணம்

(சி-8166)


### உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**19 - 12 - 93**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 11722

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

28-8589, 26-5112, 26-1494, 42-2397, 27-9136
26-2668, 26-7627, 42-9325, 27-5449, 28-3476
42-9220, 28-0732, 24-3906, 28-6546, 26-1349
26-6526, 24-6280, 26-6244, 42-3339.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்

26-0165, 26-5157, 27-6024, 27-7542.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.